## களவான பிரதேச சபை - 2021

----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

களவான பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் கரணமாக 2021 திசெம்பர் 31 இல் களவான பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் பாதகமாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிக்குரிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 2,294,617 ஆக இருக்க வேண்டிய போதும், ரூபா 1,240,867 மாத்திரம் பில்லிடப்படலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆண்டில் சரி செய்வதாக | சரியான பில்லிடல் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நிதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 2,509,708 பணமாக கிடைத்திருந்த போதும், கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பண பேரேட்டினுள் ரூபா 1,207,458 ஆன தொகை மாத்திரம் செம்மையாக்கப்படடு இருந்தது. | | பணமாகக் கிடைத்த பெறுமதியை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும. |
| (இ) | மீளாய்வாண்டிக்குரிய நீதிமன்ற தண்டப்பணம், முத்திரை கட்டண மிகை ஒதுக்கீடு முறையே ரூபா 1,445,624 மற்றும் ரூபா 5,916,537 தொகைக்காக இனங்கண்டு செம்மையாக்கி இருக்கவில்லை. | | மிகை ஒதுக்கீட்டை பேரேட்டு கணக்கு மூலம் செம்மையாக்க வேண்டும். |
| (ஈ) | பொதுபிட்டிய பாடசாலையை அண்மிய விளையாட்டு அரங்கு அபிவிருத்திற்கான ரூபா 1,474,438 தொகையை நிதிக்கூற்றினுள் செம்மையாக்கி இருக்வில்லை. | | விளையாட்டு அரங்கு அபிவிருத்தி செய்யும் செலவினத்தை |

| | | | |
|---|---|---|---|
| | | | மூலதனமாக்க வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டிற்குரிய களவான வாராந்த சந்தை வரி வருமானம் ரூபா 495,360 ஆன போதும், ரூபா 100,000 மாத்திரம் பில்லிடலாக காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆண்டில் சரி செய்வதாக | ஆண்டிற்கு உரிய வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டிற்குரிய நிலையான சொத்துக்கள் சுவீகரித்தல் மற்றும் மேம்படுத்தலிற்காக செலவிடப்பட்ட ரூபா 707,097 தொகையினை மூலதனமாக்கியிருக்கவில்லை. | | நிலையான சொத்துக்களை சுவிகரித்தல் மற்றும் மேம்படுத்தல் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (எ) | நிலையான சொத்துக்கள் அன்பளிப்புப் பெறுமதி ரூபா 469,200 இனை நிதி செயற்பாட்டு கூற்றினுள் செம்மையாக்கி இருக்கவில்லை. | | அன்பளிப்பு பெறுமதிகளை செயற்பாட்டு கூற்றினுள் செம்மையாக்க வேண்டும். |

**1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| 08 கணக்கு விடயங்களுக்குரியதாக மீளாய்வாண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதி மற்றும் துணை பதிவேடுகள் பிரகார மீதிகளிற்கிடையில் ரூபா 40,371,254 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | 2022 ஆண்டில் சரி செய்வதாக | நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதிகள் மற்றும் துணை பதிவேடுட்டு மீதிகளை இணக்கஞ் செய்ய வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 571(2) | இரண்டு ஆண்டுகளை விஞ்சிய டென்டர் பிணை பெறுமதி ரூபா 383,000 தொகை, ஒப்பந்த பிணை பெறுமதி ரூபா 8,943,260 தொகை மற்றும் நாநாவித | மேலும் பரிசோதித்து மீதிகளை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. | தொடர்படைய பிரமாணங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| பிணை பெறுமதி ரூபா 12,351,802 தொகையாக கூட்டுத் தொகை ரூபா 21,678,062 ஆன வைப்புக்கள் சம்பந்தமாக தொடர்புடைய பிரமானங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 1,464,664 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 5,797,765 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டு இறுதியில் 496 அலகுகளில் ரூபா 2,725,598 ஆன வீதவரி நிலுவையொன்று காணப்பட்டதுடன், அதனுள் 02 அரச நிறுவனங்களிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 33,299 ஆன மீதியொன்று மற்றும் 494 தனியார் அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,692,299 ஆன மீதியொன்று காணப்பட்டது. | நிலவும் பொருளாதார நிலைமையின் முன் வரி அறவிடும் நடவடிக்கை மிக கடினமானது எனவும் நடமாடும் நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்தி நிலுவை அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | சட்டத்தின் பிரிவுகள் மற்றும் தொடர்புடைய விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ) ஏனைய வருமானங்கள்** | | |
| சபை அதிகார எல்லைனுள் அறிவித்தல் பலகை கணிப்பீடொன்றின் மூலம் இனங்கண்டுள்ள தற்போது காட்சிப்படுத்தப்பட்டுள்ள, 24 நிலையான அறிவித்தல் பலகைகளிலிருந்து 2020 ஆண்டிற்காக ரூபா 270,425 தொகையும், 2021 ஆண்டிற்காக 27 பலகைகளிலிருந்து ரூபா 323,675 தொகையுமாக கூட்டுத் தொகை ரூபா 594,100 தொகையொன்றை கணக்காய்வு திகதியான 2022 சனவரி 19 திகதி வரையும் சபை | கடிதம் மூலம் அறிவூட்டி நடமாடும் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தி உரிய வருமானங்களை விரைவாக அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | அதிகார எல்லைனுள் நிறுவியுள்ள அறிவித்தல் பலகைகளை இனங்கண்டு அறவிட வேண்டிய தொகையை அறவிட வேண்டும். |

நிதியத்திற்கு அறவிட இயலாதிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சபை அதிகார எல்லைனுள் அனுமதியற்ற நிர்மாணங்களை இனங்காண 2015 முதல் 2019 ஆண்டு வரை நடவடிக்கை எடுத்திருக்காததுடன், 2020 முதல் 2021 ஜுன் வரை இனங்காணப்பட்ட 05 அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக தொழில்நுட்ப அலுவலர் அறிக்கை பெற்றுக் கொள்ள அனுப்பப்பட்டு, ஒரு அனுமதியற்ற நிர்மாணத்தை முறையாக்கவும், எஞ்சிய அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுமாறு அறிவித்து கடிதம் அனுப்புதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சபை அதிகார எல்லைனுள் அனுமதியற்ற நிர்மாணங்களை இனங்காண்பதற்கு ஒழுங்கான முறைமையொன்று இல்லாமையென அவதானிக்கப்பட்டது. | அந்த அனுமதியற்ற நிர்மாணங்களை நிறுத்துமாறும், ஒழுங்கமைக்க சபைக்கு விண்ணப்பம் அனுப்புமாறும் அறிவித்து அனுப்பப்பட்டுள்ளதாக. | அனமதியற்ற நிர்மாணங்களை அகற்ற அல்லது ஒழுங்கமைக்க நடவடிககை எடுக்க வெண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான ரஜ்ஜுருவத்த – மல்வலாகெலே பிரதேசத்தில் உள்ள அ.க.சி. 243 இன் லொட் 200 தெபரபெதி ஹேநே மூகலான காணியிலுள்ள சபைக்கு சொந்மான 02 வீடுகளை இரண்டு நபர்களுக்கு 1983 ஆண்டில் உடன்படிக்கை கைச்சாத்திடாது மாதாந்தம் ரூபா 40 யிற்கு குத்தகை வழங்கியுள்ளதுடன், ஒரு குடியிறுப்பாளர் 2000 ஆண்டு வரை வரி செலுத்தியுள்ளதாகவும், அதன் பிரகாரம் அந்த வீடுகளின் உரிமையை ஒப்படைக்கமாறு 2021 திசெம்பர் 02 திகதிய கடிதம் மூலம் அறிவித்துள்ளார். அதன் பிரகாரம் சபைக்கு சொந்தமான 02 வீடுகளிற்கு 2000 வருடத்தின் பின் மதிப்பிட்டு வரி தொகையை அறவிட சபைக்கு இயலாதுள்ளதாகவும், இக் | மதிப்பீட்டு திணைக்களத்தின் அறிக்கை கிடைத்துள்ளதாகவும், அதன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக. | காணியை அளவை செய்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

காணிகளை அளவை செய்து தீர்ப்பதற்கு சபை நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது.

## 3.3 ஒப்பந்த நிருவகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் ஏற்பாட்டின் மீது பொதுபிட்டிய பாடசாலை அண்மிய விளையாட்டு மைதான அபிவிருத்திற்காக ரூபா 1,500,000 ஆன மதிப்பீடொன்றை அங்கீகரித்து பாடசாலையின் அனுமதியின்றி 2021 மார்ச் 02 ஆம் திகதி மேற்குறிப்பிட்ட கருத்திட்டத்தை பிரதேச சபை உடாக நேரடி ஊழிய அடிப்படையில் செயற்படுத்தியிருந்ததுடன், ஒப்பந்த காலம் 08 நாட்கள் ஆன போதும், கருத்திட்டத்தை ஆரம்பித்து ஒரு ஆண்டிற்கு அதிக காலமொன்று கடந்திருந்த போதும், கருத்திட்டத்தின் வேலைகள் இடைநடுவே நிறுத்தப்பட்டதால் விளையாட்டு மைதானத்தில் விளையாட முடியாத நிலைமைக்குள்ளாகி அப்பாடசாலை மாணவர்களைப் போன்று பிரதேசத்தின் விளையாட்டு வீரர்கள் கஷ்டத்திற்கு உள்ளாகியிருந்தனர். கருத்திட்ட வழிகாட்டியின் பிரகாரம் இயந்திர உபகரணங்களுக்காக செலவாகும் எரிபொருள் செலவை மாத்திரம் மீள்நிரப்ப வேண்டிய போதும், மாகாண கட்டிட நிர்மாண அங்கீகார விலைகளின் பிரகாரம் ரூபா 1,474,438 இற்கான செலவின அறிக்கை மற்றும் அளவையறிக்கையை பிரதேச சபையினூடாக சமர்பிக்கப்பட்டிருந்தன. | உரிய அலுவலர்களால் இதுவரை பதில் வழங்கப்படவில்லையென. | உரிய காலத்தினுள் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும், அதனூடாக எதிர்பார்த்த விளைவை அடைந்து கொள்ளவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

4. **கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**சுற்றாடல் பிரச்சினை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சபை அதிகார எல்லையில் மீளாய்வாண்டில் 70 மெட்ரிக் டொன் அளவான திண்ம கழிவுப் பொருற்களை வெளியிட 14 ஆளணி ஊழியர்களிற்காக ரூபா 3,176,698 தொகையும், 03 வாகனங்களிற்காக ரூபா 1,192,695 தொகையும் செலவிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அக் கழிவுகளை வெளியிடல் ஒழுங்காக மற்றும் சுற்றாடல் நேய முறையிற்கு மாற்றமாக நிலத்தில் குழிகள் வெட்டி அதனுள் கழிவுகளையிட்டு குழிகள் மூடப்படுவதன் மூலம் பல சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன. | குப்பை கொட்டிலொன்றை நிர்மாணிக்கும் அளவிற்கு போதிய ஏற்பாடு சபைக்யிற்கு இல்லாயெனவும், உரிய கோரிக்கையை மாகாண சபைக்கு அனுப்பியுள்ளதாக. | தின்ம கழிவுப் பொருள் முகாமைத்துவ திட்டமொன்றை தயாரித்து முறையாக தின்ம கழிவுப் பொருள் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |